வருகின்ற 2020-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09-ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் பவானி நகராட்சியில் அனைத்து வார்டு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பார்வையிட்டு பணியாளர்கள் மூலம் தினமும் ஸ்பிரேயர்களை கொண்டு கிருமி நாசினி தெளிக்கும் பணியினை மேம்படுத்தி விரைவாகவும், குறுகி கால அளவில் விடுபடாமல் அனைத்து வார்டு பகுதிகளிலும் தொழில்நுட்ப முறையில் (Technologies basis) இயந்திர விசையின் (Mechanic Force ) மூலம் கிருமி நாசினி தெளிக்க ஏதுவாக 600 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாகனமான மகேந்திரா பிளாஸ்ட் ஸ்பிரேயர் Mahindra & Mahindra Blast Sprayer - 600 litre - 1No மற்றும் மகேந்திரா மினி டிராக்டர் Mahindra & Mahindra Tractor - Jivo 245 -1no ஆகியவைகளை வாங்கி பயன்படுத்தி கொரோனா முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். எனவே மேற்கண்ட வாகனத்தை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 3336/ஜே2/2020-9, நாள்: 02.04.2020-ன் கடிதத்தில் " கோவிட் -19 " அவசர பணிகளுக்கு Tamil Nadu Transparency in Tenders Act,1998 under section -16(9) -ல் இருந்து விலகளித்து விரைவாக கொள்முதல் செய்து பயன்டுத்துமாறு கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள் எனவே மேற்கண்ட பணியை விலைப்புள்ளி கோரி பணியை மேற்கொள்ளலாம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதி 2020 -21 -ல் செலவை மேற்கொள்ளவும் மற்றும் இதற்கு SDRF மாநில பேரிடர் மேலாண்மை நிதி திட்ட நிதி வரப்பெற்றால் பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.437/2020/இ1)

**இடம்: பவானி**

**நாள்: 09.04.2020**

(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்
ஆணையாளர்/தனி அலுவலர்
பவானி நகராட்சி

வருகின்ற 2020-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்

பவானி நகாட்சி கொரோனா வைரஸ், முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைக்கு மகேந்திரா & மகேந்திரா பிளாஸ்ட் ஸ்பிரேயர் 600 லிட்டர் கொள்ளளவு - ஒன்றும், மகேந்திரா & மகேந்திரா டிராக்டர் -Jivo 245 - ஒன்றும் கொள்முதல் செய்யும் பணி, தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 88, நாள்:09.4.2020 -ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 16.04.2020 -ல் அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளி ஒன்று வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

M/s. Adharva Trators & farm Equipments, Karur.

| | |
|---|---|
| 1. Mahindra & Mahindra blast sprayer 600lit capacity | - 1No x 421429 - Rs.4,21,429.00 |
| 2. Mahindra & Mahindra Tractor Jivo 245 | - 1No x 431000 - Rs.4,31,000.00 |
| | Total - Rs.8,52,429.00 |
| | GST @ 12% Rs. 1,02,291.00 |
| 3. Insurance and Registration charge( RTO charge) | - Rs.15000.00 |
| Total | - Rs.9,69,720.00 |

அலுவல குறிப்பு:

வரப்பெற்ற விலைப்புள்ளியை ஏற்று திருவாளர் Adharva Tractors & Farm Equipments, karur அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.437/2020/இ1)

இடம்: பவானி
நாள்: 16.04.2020

(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்
ஆணையாளர்/தனி அலுவலர்
பவானி நகராட்சி

வருகின்ற 2020-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O(D)No.141, நாள்:23.04.2020 -ல் COVID-19 கரோனா வைரஸ் தொற்று காரணமாக ஊரடங்கு உத்திரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து 2019-20 மார்ச் 31-ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்கள் செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், போன்றவை செலுத்துவதற்கான கால அவகாசம் 3 மாதங்களுக்கு (30.06.2020) வரை நீட்டிக்கப்படுகிறது என அரசாணை வெளியிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

(ந.க.எண்.486/2020/அ1)

3. பவானி நகராட்சி அம்மா உணவகத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.0.75 இலட்சத்திற்கு தீர்மான எண். 82 நாள்: 31.03.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 29.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.பாலசுப்ரமணியன் | 0.46 மதிப்பீட்டு விகித்தை விட குறைவு |
| 2 | திரு.பி.ஏ.செல்லப்பன் | 1.82 மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகித்தை விட 0.46% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எஸ்.பாலசுப்ரமணியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.413/2020/இ1)

4. பவானி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN36AY6793 வாகனத்தின் செல்ப்மோட்டார், டைனமோ மற்றும் பேட்டரி ஆகியவைகள் பழுதுபட்டுள்ளது. இதனை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.12000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. பொது நிதி 2020 -21 -ல் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.476/2020/இ1)

5. பவானி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN36AY6793 பழுது பார்க்கும் பணிக்கு தொகை ரூ.12,000/-க்கு தனி அலுவலர் அவர்கள் 21.04.2020 அன்று முன் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 24.04.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | எண்ணிக்கை | திருவாளர் அனிதா ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், பவானி | திருவாளர் சீத்தா எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், பவானி | திருவாளர் ஸ்ரீபவானி ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ் பவானி. |
|---|---|---|---|---|---|
| **Self Motor Service** | | | விலை .(ரூபாயில் ) | | |
| 1 | Brush with brush holder | 1 set | 1000.00 | 1100.00 | 1400.00 |
| 2 | Fiber set | 1no | 300.00 | 330.00 | 380.00 |
| 3 | Labour charges | 1 no | 700.00 | 740.00 | 740.00 |
| 4 | Battery acid charge and recharge | 1no | 600.00 | 650.00 | 670.00 |
| **Dynamo Repair** | | | | | |
| 5 | Replacement of cut outer | 1no | 1200.00 | 1250.00 | 1300.00 |
| 6 | Replacement of fiber set | 1no | 350.00 | 375.00 | 400.00 |
| 7 | Replacement of 6202 bearing | 1no | 350.00 | 375.00 | 395.00 |
| 8 | Labour charges | 1no | 700.00 | 725.00 | 750.00 |
| **Battery Repair** | | | | | |
| 9 | Replacement of battery SF Sonic, Type SP 70R | 1no | 6800.00 | 6900.00 | 7000.00 |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண். 1 முதல் 9 வரை உள்ள இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் அனிதா ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், பவானி அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம்கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.476/2020/இ1)

6. பவானி நகராட்சி பேரிடர் மேலாண்மை COVID -19 தடுப்பு பணிகளின்படி நாடு முழுவதும் 144 தடை உத்திரவு பிறப்பிக்கப்பட்டு உள்ள நிலையில் பொதுமக்கள் அதிகம் கூட்டம் சேர்வதை தவிர்க்கும் பொருட்டு அத்தியாவசிய தேவையான காய்கறிகளை வீடுவீடாக சென்று விநியோகம் செய்ய வேண்டி காய்கறிகளின் தொகுப்பினை நிரப்ப ஏதுவாக 12’ x15’ என்று அளவில் துணி காடா பை வாங்கிடவும் காய்கறிகளின் தொகுப்பினை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க ஏதுவாக தனியார் வண்டி (TATA ACE) வாடகை அடிப்படையில் ஏற்படுத்தி கொள்ளவும் ஏப்ரல் மாதம் முடிய 26 நாட்களுக்கு ரூ.36000/- ஆகும். பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி 03.04.2020 பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்று குறைந்த விலைப்புள்ளி தொகை வழங்கிய திரு.எஸ்.பாலசுப்ரமணியன் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை | |
|---|---|---|
| | பை | வண்டி |
| 1.திரு.எஸ்.பாலசுப்ரமணியன், | ரூ.9.00 /ஒன்றுக்கு | ரூ.850.00/ நாள் ஒன்றுக்கு |
| 2.திரு.பி.ஏ.செல்லப்பன், | ரூ.10.00/ஒன்றுக்கு | ரூ.925.00 / நாள் ஒன்றுக்கு |
| 3. திரு.எம்.எஸ்.குருசாமி | ரூ.18.50/ ஒன்றுக்கு | ரூ.900.00 / நாள் ஒன்றுக்கு |

அலுவலக குறிப்பு:

தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.432/2020/அ1)

7. இந்நகராட்சிப்பகுதியிலுள்ள 33 பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களை இந்நகராட்சி வாகனம் Mahindra & Mahindra Jivo - 245 ல் 50 மீட்டர் நீளமுள்ள 3/8 R1 ஓஸ் பிட்டிங் செய்து தினமும் கம்பரசர் மூலம் சுத்தம் செய்ய ஏதுவாக புதியதாக மேற்குறிப்பிட்ட R1 3/8 ஓஸினை கொள்முதல் செய்து வாகனத்தில் பொருத்தி சுத்தம் செய்ய மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.40,000/க்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண்.487/2020/எச்1)

8. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களின் கடிதம் எண்.T4/TNPCB/F/007641/BMWM/2020-2, நாள்: 26.03.2020 -ல் கோவிட்-19 நோய் தடுப்பு பணியின் போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்களின் வீடுகளில் உருவாகும் ( Home Quarantine houses) கழிவுகளை மருத்துவ கழிவுகளாக பாவித்து மருத்துவ கழிவுகளை கையாளும் விதிமுறைகளின்படி அப்புறப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் மேற்குறிப்பிட்ட வீடுகளில் சேரும் கழிவுகளை மருத்துவ கழிவுகளை முறைப்படி சேகரித்து அப்புறப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சி பகுதியில் கோவிட் -19 நோய் தடுப்பு பணிகளில் மேற்கொள்ளப்படுவதில் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் தினமும் சேகரமாகும் கழிவுகளினை தனியே சேகரித்து இந்நகராட்சி பகுதிக்கான CBWTF வசதியுடைய நிறுவனமான M/S Ramkay Energy Environments Ltd சேலம் அவர்களிடம் வழங்கவும் அந்நிறுவனம் நிர்ணயித்துள்ள கட்டணமான ரூ.20,000/- ( Per month) Upto 15kg perday ) மற்றும் தினமும் 15 கிலோவிற்கு கூடுதலாக சேரும் கழிவிற்கு கிலோ 1க்கு ரூ.51 /- வீதமும் கூடுதலாக வழங்கிடவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.360/2020/எச்1)

9. நகர்மன்றத் தீர்மான எண். 01, நாள்: 06.01.2020 -ல் பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.1,3,4,8,10 மற்றும் 15-ல் எதிர்வரும் 14வது நிதிக்குழு மானியம் 2019-20 முதல் தவணை சாலைப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நகர்மன்றத் தீர்மான எண்கள்:10,11,12 நாள்: 31.01.2020-ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது.

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 7184/2020/எல்ஏ3-1, நாள்: 24.03.2020-ல் பவானி நகராட்சிக்கு 14th CFC -ன் கீழ் மான்ய தொகை ரூ.1,16,15,829 (2019-20 முதல் தவணை) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

1. குடிநீர் திட்டப் பணிகளுக்கான பங்குத் தொகை மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்கள்
2. தமிழ்நாடு மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின்கட்டணங்கள்
3. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை
4. திடக்கழிவு மேலாண்மை திட்டங்கள்
5. சாலை மற்றும் நடைபாதைப்பணிகள்
6. பார்க்,விளையாட்டு மைதானம் மற்றும் மயானம் போன்றவற்றில் பராமரிப்பு பணிகள்

மேற்கண்ட பணிகளில் வரிசை எண்.5-ல் குறிப்பிடப்பட்டுள்ள சாலைப்பணிகள் தற்போது நடைபெற்று வருவதால் மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களால் 14th CFC க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை மேற்கண்ட பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். (ந.க.எண். 007/2020/இ1)

10. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல், கட்டுப்படுத்தும் விதமாக 2020-2021-ம் ஆண்டு ஏடிஸ் கொசு மூலமாக பரவும் டெங்கு காய்ச்சலை, பள்ளி மாணவர்கள் சுமார் 17 பள்ளிகளில் 5350 எண்ணிக்கை குழந்தைகளுக்கும் காய்ச்சல் கண்ட பொது மக்களுக்கும், நிலவேம்பு குடிநீர் வழங்க ஏதுவாக, நில வேம்பு குடிநீர் பவுடரை Tampcol என்ற தமிழ்நாடு அரசு சார்பு மூலிகை பண்ணை - சென்னை அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளவும் 2020-2021-ம் நிதியாண்டில் தேவைக்கேற்ப அவ்வப்போது Tampcol சென்னை நிறுவனத்திடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட விலையில் விகிதத்தில், தேவைக்கேற்ப வாங்கி பயன்படுத்திக் கொள்ள, அதற்கான உத்தேச செலவு ரூ.2,00,000/- ( இரண்டு இலட்சம் ) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1.பொது சுகாதாரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 274 /2020/எச்1)

11. இந்நகராட்சியின் அலுவலக உபயோகத்திற்கு தேவையான 2020- 2021-ம் ஆண்டிற்கு எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் பாரங்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ.7.00 ( ஏழு இலட்சம் ) பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 472 /2020/எச்1)

12. இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கும் கிருமிநாசினி தெளித்து கிருமி நாசினம் செய்யும் பணிகளுக்கும் தேவைப்பட்ட விழிப்புணர்வு Flex போர்டுகள், விழிப்புணர்வு விளம்பரப் பணிகள் மற்றும் கணக்கெடுப்பு படிவங்கள் அச்சடித்தல் போன்றவைகளும், லைசால், பணி பாதுகாப்பு உபகரணங்கள், ஸ்பிரேயர்கள் கொள்முதல் மற்றும் Power Sprayer-கள் வாகனத்தில் பொருத்தியது போன்ற பணிகள் நோய் தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்காணும் நிறுவனத்தினரிடம் இருந்து கொள்முதல் செய்தும், பணிகள் மேற்கொண்டும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>**கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களின் / பணிகளின் விபரம்:**</u>

| வ.எண் | பொருட்களின் விபரம் | அளவு/எண்ணிக்கை | பொருட்கள் விநியோகித்த நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | Hand Sanitizer | 5 லிட்டர் | **M/s** ஸ்ரீ பாலு மெடிக்கல்ஸ், 6/456ஏ, கவுந்தபாடி ரோடு, காளிங்கராயன் பாளையம், பவானி. |
| 2 | Bleaching Powder | 1 MT | **M/s TNSTC(CBE) Erode Region Emp. Co-op Stores Ltd** |
| 3 | Bleaching Powder | 3000 Kg | **M/s** Tamilnadu Muliti purpose Indco Serve, திருச்சிராப்பள்ளி-8. |
| | Lysol 5% | 200 லிட்டர் | |
| 4 | Kishan Kiraft Power sprayer model NO: KK 70 புதியதாக கொள்முதல் செய்தது. | 5 No's | M/s SRS Engineering No:21, Poonga Nagar, Machampalayam, Sundarapurak (P.O), Coimbatore – 641 024. |
| 5 | கொரோனா வைரஸ் நோய் தடுப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - கிருமி நாசினி கொண்டு கைகளை சுத்தம் செய்தல் குறித்த செயல்முறை விளக்கம் சார்ந்த ப்ளக்ஸ் போர்டு | 8' X 6' Size – 10 No's | A.ரவிக்குமார், விளம்பர பதாகைகள் வழங்குபவர், 601, மேட்டூர் ரோடு, பவானி. |
| | கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 4' X 3' Size - 3 No's | |
| | கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் - கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்தல் குறித்த ப்ளக்ஸ் போர்டு | 4' X 4' Size - 3 No's | |
| | நடமாடும் காய்கறி அங்காடி விலைப்பட்டியல் குறித்த ப்ளக்ஸ் போர்டு | 4' X 4' Size - 6 No's | |
| | நடமாடும் காய்கறி அங்காடி விலைப்பட்டியல் குறித்த ப்ளக்ஸ் போர்டு | 4' X 4' Size - 3 No's | |
| 6 | Rubber Hand Gloves | 130 No's | M/s SRI AURO RAAM, 9/2, Akilmedu 6th Cross Street, Andavar Complex, Bus stand Back side, Erode - 638 001. |
| | Nitrile Hand Gloves | 15 Boxes | |
| | Googles | 20 No's | |
| | Personal Protective Equipments | 25 Set's | |
| | Disposable 3 ply masks | 5000 No's | |
| | Heavy Type Original N 95 Masks | 55 No's | |
| 7 | கொரோனா வைரஸ் தொற்று நோய் கணக்கெடுப்பு படிவம் 33 படிவங்கள் | 30000 No's | M/s Sri Murugan Offset Printers, 88 Sathy Mainroad, Kavindapadi, Erode Dt. |
| 8 | சோடியம் ஹபோகுளோரைடு 60 % Solution | 2000 litres | M/s MSP pest control Services, 45 IInd floor, Block A, Senthan Kandhan Complex, Erode. |
| 9 | Supply of disposable nitrile hand gloves | 10 Boxes (Box Contains 100 No's) | M/s K. NandhaKumar(Old No-279) 548, Agraharam Street, Erode |
| | Supply of PPE Kit | 100 No's | |
| 10 | Goggles | 10 No's | M/s Tamilnadu Muliti purpose Indco Serve, திருச்சிராப்பள்ளி-8. |
| | Hand Sanitizer | 20 litres | |

மேற்படி, பொருட்கள் மற்றும் பணிகளை நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட நிறுவனத்தாரரின் விலைவிகிதத்தில் கொள்முதல் செய்து நோய் தடுப்பு பணிகள் மேற்கொண்டதற்கான செலவினம் ரூ.9,24,479/-னை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

(ந.க.எண். 360 /2020/எச்1)

13. இந்நகராட்சி பகுதியில் உள்ள 27 வார்டுகளிலும் தினமும் சேகரமாகும் குப்பைகள் தரம் பிரித்து BOV மற்றும் தள்ளுவண்டிகள் மூலம் சேகரிக்கப்படுகிறது. BOV மற்றும் தள்ளு வண்டிகளில் உள்ள பிளாஸ்டிக் டப்பாக்கள் உடைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளதால் கழிவுகள் சேகரிப்பதில் சிரமம் உள்ளது. எனவே தள்ளு வண்டிகளிலும் BOV வாகனங்களிலும் பொருத்தி கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்க ஏதுவாக புதியதாக பின்வரும் விபரப்படி புதியதாக பிளாஸ்டிக் டப்பாக்கள் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ள வேண்டி உள்ளது.

| | | |
|---|---|---|
| 50 Litr's கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் டப்பாக்கள் - | பச்சை | - 30 No's |
| | வெள்ளை | - 10 No's |
| | நீலம் | - 10 No's |
| | சிவப்பு | - 10 No's |
| 80 Litr's கொள்ளவு கொண்ட பிளாஸ்டிக் டப்பாக்கள் - | பச்சை | -30 No's |
| | வெள்ளை | -10 No's |
| | நீலம் | -10 No's |
| | சிவப்பு | -10 No's |

மேற்கண்ட விபரப்படி புதியதாக பிளாஸ்டிக் டப்பாக்கள் வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.1,50,000/-ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 275 /2020/எச்1)

இடம்: பவானி
நாள்: 30.04.2020

(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்
ஆணையாளர்/தனி அலுவலர்
பவானி நகராட்சி